**சுருக்கம்**

கோவிட்–19 – பத்திரிக்கை ஊடகப் பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவிக்கப்பட்டது – சலுகைகள் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி1) துறை**

அரசாணை(நிலை) எண்.258

நாள்: 31.05.2021
பிலவ, வைகாசி – 17
திருவள்ளுவர் ஆண்டு 2052

*****

**ஆணை:**

மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்குவதற்காக, மத்திய மாநில அரசின் காவல் துறையில் பணியாற்றும் பணியாளர்கள், முப்படை வீரர்கள், ஊர்க் காவல்படை பணியாளர்கள், சிறைச்சாலை பணியாளர்கள், பேரிடர் மேலாண்மையில் ஈடுபடும் தன்னார்வலர்கள், கொரோனா கட்டுப்பாடு பகுதிகளில் பணியாற்றும் நகராட்சி / வருவாய் துறை ஊழியர்கள் ஆகியோரை முன்களப் பணியாளர்களாக அறிவித்துள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிக்கை ஊடகப் பணியாளர்களை முன்களப் பணியாளர்களாக 04.05.2021–ஆம் தேதியில் அறிவித்தார். இது குறித்து உரிய ஆய்வு செய்து, பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பணியாற்றி வரும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பணியாற்றி வரும் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்கள், புகைப்படம் மற்றும் ஒளிப்பதிவு பணியாளர்கள் (Recognized Journalists, Photographers and Camera Persons மற்றும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட Accreditation Card and Press pass Holders) ஆகியவர்களுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஆணையிடப்படுகிறது:–

அ. மேற்குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட ஊடக மற்றும் பத்திரிக்கை பணியாளர்களுக்கு முழு ஊரடங்குகளின் போது தடையேதுமின்றி பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படும்.

ஆ. மத்திய அரசின் ஆணைப்படி பத்திரிக்கை / ஊடக பணியாளர்கள் மத்திய அரசின் முன்களப் பணியாளர்கள் பட்டியலில் இல்லாவிடினும், 18 முதல் 45 வயது உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடும் போது, மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படும்.

இ. கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, மேற்கூறிய பணியாளர்கள் இறக்கும் நேர்வுகளில், அவர்களின் குடும்பங்களுக்கு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வாயிலாக உரிய நிவாரணம் வழங்கப்படும்.

3. இவ்வரசாணை அ.சா.கு எண். 1532/FS/P/2021, நாள்: 20.05.2021–இல் நிதித் துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–600 006.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை–600 006.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை–600 006.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 600 010.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–600 006.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை–600 008.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–600 003.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 0018.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–600 035.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம்.
**நகல்:**
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர், செய்தித் துறை, சென்னை–600 009.
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை–600 009.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி) முதன்மை தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதி (சுகாதாரம்–2) துறை, சென்னை–600 009.
அனைத்துத் துறைகள், சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப் பிரிவு / அனைத்து பிரிவுகள்) துறை,
சென்னை–600 009.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

31/5/21
பிரிவு அலுவலர்
31.5.2021